திமிர்ந்த ஞன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஜூன் 10-ல் ஆர்ப்பாட்டம் நடத்த விவசாயிகள் சங்கம் முடிவு**

First Published : 14 May 2010 12:40:10 AM IST

அரூர், மே 13: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூன் 10-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

அரூரில் சங்கப் பொறுப்பாளர் சி.அங்கமுத்து தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற சங்க ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் அவர்களது விருப்பம் இன்றி திருவண்ணாமலை பண்ணாரியம்மன் தனியார் சர்க்கரை ஆலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

எனவே விவசாயிகளின் விருப்பத்தின் அடிப்படையில் கரும்பு எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்தவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 5 ஆண்டு இடைவெளியில் செலுத்தும் வகையில் வட்டியில்லா கடன்கள் வழங்க வேண்டும். கரும்பை நடவு செய்தவுடன் ஆலை நிர்வாகம் பதிவு செய்து ரசீது வழங்க வேண்டும். கரும்புகள் வெட்டுவதற்கான பதிவு மூப்பு பட்டியிலை கோட்ட அலுவலகத்தில் விளம்பரம் செய்ய வேண்டும்.

சொட்டுநீர்ப் பாசனத்துக்கு தேவையான கருவிகளை விவசாயிகள் விரும்பும் நிறுவனத்தில் வாங்க அனுமதிக்க வேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஜூன் 10-ம் தேதி கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலர் டி.ஏழுமலை, மாவட்டச் செயலர் கே.என்.மல்லையன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பி.குமார், மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.கே.கோவிந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வெயிலால் விளைச்சல் பாதிப்பு: காய்கறிகள் விலை கடும் உயர்வு**

First Published : 14 May 2010 03:26:04 AM IST

ஈரோடு, மே 13: கோடை வெயில் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டு, காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

வெயில் காரணமாக, காய்கறிச் செடிகளில் பூக்கள் உதிர்ந்து விடுகின்றன. மேலும் போதிய தண்ணீர் இல்லாததால் செடிகள் கருகி வருகின்றன. இதனால் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஈரோடு காய்கறிச் சந்தையில் அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்து விட்டது.

ஒரு கிலோ தக்காளி ரூ.20-க்கு விற்பனையாகிறது. இதேபோல் கேரட், அவரை, பீட்ரூட், கொத்தவரங்காய், பச்சை மிளகாய், வெண்டை, சேனை என அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்து விட்டது. ஒரு கட்டு கொத்தமல்லி ரூ.15-க்கு விற்பனையாகிறது. வெங்காயம் விலை மட்டும் உயரவில்லை.

தொடர்ந்து வெயில் கடுமையாக இருந்தால், காய்கறிகளின் விளைச்சல் மேலும் குறைந்து, விலை இன்னும் அதிகரிக்கலாம் என காய்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மீதமுள்ள பயிர் காப்பீட்டுத் தொகை விரைவில் வழங்கப்படும் : ஆட்சியர்**

First Published : 14 May 2010 12:18:53 AM IST

மயிலாடுதுறை, மே 13: நாகை மாவட்ட விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் மூலம் இதுவரை 90 சத பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 சத பயிர் காப்பீட்டுத் தொகையான ரூ. 15.11 கோடி விரைவில் வழங்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் சி. முனியநாதன்.

நாகை மாவட்டம், குத்தாலம் வட்டம், பழையக்கூடலூரில் மனுநீதி நாள் முகாம் புதன்கிழமை நடைபெற்றது. இந்திய உணவுக் கழக மண்டல ஆலோசனைக் குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், மயிலாடுதுறை கோட்டாட்சியர் என். பழனி, குத்தாலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆர். மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமுக்கு தலைமை வகித்து, மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் பேசியது:

கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில், நாகை மாவட்டத்தில் இதுவரையில் 1,42,000 குடிசை வீடுகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன.

நாகை மாவட்ட விவசாயிகளுக்கான மீதமுள்ள பயிர் காப்பீட்டுத் தொகை 15.11 கோடி ரூபாய0 விரைவில் வழங்கப்படும் என்றார் ஆட்சியர். தொடர்ந்து, பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

சிறுபான்மை மற்றும் சீர்மரபினர் துறை மாவட்ட அலுவலர் பழனி, ஆதிதிராவிடர் நலத் துறை மாவட்ட அலுவலர் ராஜன், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் எஸ். சூரியகலா, மாற்றுத் திறனாளிகள் துறை மாவட்ட அலுவலர் யமுனாபாய், வேளாண் துறை இணை இயக்குநர் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் முத்துசாமி உள்ளிட்ட அலுவலர்கள் துறை சார்ந்த திட்டங்கள் குறித்துப் பேசினர்.

குத்தாலம் வட்டாட்சியர் ஜீவானந்தம், குத்தாலம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ரத்தினகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சந்தானகிருஷ்ணன், ஒன்றியக் குழு உறுப்பினர் அருணாரவி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக பழையக்கூடலூர் ஊராட்சி மன்றத் தலைவர் எம். சண்முகம் வரவேற்றார். நிறைவில் பழையக்கூடலூர் ஜிகேஆர் மெட்ரிக் பள்ளி முதல்வர் ஈஸ்வரி நன்றி கூறினார்.

**கோடை மழை இல்லாததால் நெல் பயிர்கள் கருகும் நிலை**

First Published : 14 May 2010 01:41:31 AM IST

ராஜபாளையம், மே 13: ராஜபாளையம் மற்றும் சிவகிரி பகுதியில் போதிய கோடை மழை இல்லாததால் சுமார் 5 ஆயி ரம் ஹெக்டேர் பரப்பளவு நெல் பயிர்கள் போதிய தண்ணீர் வசதி இல்லாமல் கருகும் நிலையில் உள்ளது.

ராஜபாளையம் சேத்தூர், முகவூர் மற்றும் சிவகிரி பகுதியில் இந்த ஆண்டு கடந்த மாசி மாதம் முதல் கோடை நெல் சாகுபடி நடவுப் பணிகள் துவங்கியது. கோடை மழை போதிய அளவில் பெய்யும் என்ற நம்பிக்கையில் பெரும்பாலான சிறு விவசாயிகள் நெல் நடவு செய்தனர்.

நெல் வயல்களில் தூர்ப் பகுதியில் எப்போதும் தண்ணீரின் ஈரப்பதம் இருந்தால்தான் பயிர்கள் பக்கப் பயிர் உருவாகி அதிக மகசூல் கிடைக்கும். களை அதிகம் இருக்காது. ஆனால் இந்த ஆண்டு கோடை மழை மிகக் குறைவாக ஒரு சில பகுதிகளில் மட்டுமே பெய்தது. இதனால் குளங்களில் தண்ணீர் இல்லை. கிணறுகளிலும் நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இருக்கும் தண்ணீரையும் பயிர்களுக்கு பாய்ச்ச அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் கிணற்று நீரையும் சீராக பாய்ச்ச முடியவில்லை.

தண்ணீர் வசதி இல்லாமல் பயிர்களுக்கிடையே அதிக களைச் செடிகள் முளைத்து, கப்ளை எடுக்க விவசாயிகள் அதிகச் செலவு செய்தனர்.

கடந்த மாசி மாதம் முதல் ராஜபாளையம், சிவகிரி வட்டப் பகுதியில் கோடை நெல்சாகுபடி சுமார் 8 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மேற் கொள்ளப்பட்டது. இதில் தண்ணீர் வற்றாத கிணற்றுப் பகுதியில் நெல் நடவு செய்த பயிர்கள் மட்டுமே பரவலாக விளைச்சல் கண்டுள்ளது.

சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு நெல் சாகுபடிப் பயிர்கள் சீரான தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விளைச்சல் கேள்விக் குறியாகியுள்ளது. பெரும்பாலான இடங்களில் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சாமல் பயிர்கள் கருகும் நிலையில் உள்ளது.

**சாதகமான சூழ்நிலை உருவாகும்வரை பள்ளியைத் திறப்பதில்லை**

First Published : 13 May 2010 03:19:29 AM IST

Last Updated : 13 May 2010 10:55:00 AM IST

பழனி, மே 12: பழனியில் புதன்கிழமை நகராட்சி சார்பில் நடைபெற்ற ஆக்கிரமிப்பு அகற்றத்தின் போது கடைக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் கைவிடப்பட்டது.

பழனியில் காந்தி ரோடு, ஆர்.எப். ரோடு, பாளையம், மார்க்கெட் உட்பகுதி உள்ளிட்ட பல இடங்களில் கடைக்காரர்களால் சாலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. தவிர, பஸ் நிலையத்தில் இருந்து மலைக்கு பக்தர்கள் செல்லும் வழியில் உள்ள பிளாட்பாரங்கள் முழுக்க கடைகள் வைக்கப்பட்டு, பக்தர்கள் சாலையின் நடுவில் செல்லும் நிலை நீடித்து வருகிறது.

இந் நிலையில் நகராட்சி சார்பில் காந்தி ரோட்டில் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது. நகரமைப்பு அலுவலர் ருத்ரபதி தலைமையில் நகராட்சிப் பணியாளர்கள் இப்பணியை மேற்கொண்டனர்.

ஒரு சில கடைகளில் ஆக்கிரமிப்பை அகற்ற வாய்வழி உத்தரவிட்ட அதிகாரிகள், சில இடங்களில் ஆக்கிரமிப்பை அகற்றி லாரியில் ஏற்றினர். இதனால் கடைக்காரர்கள் பாரபட்சமாக ஆக்கிரமிப்பு அகற்றம் செய்யக்கூடாது என்றும், தங்களுக்கு போதிய கால அவகாசம் வேண்டும் என்றும் கோரியதையடுத்து, பதற்றம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு வந்த போலீசாருடனும் கடைக்காரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, ஆக்கிரமிப்பு அகற்றும் பணி கைவிடப்பட்டது.

ஆக்கிரமிப்பு அகற்றம் வியாழன் அல்லது வேறு நாளில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**மாம்பழ பூச்சிகளைக் கட்டுப்படுத்த செயல் விளக்கம்**

First Published : 13 May 2010 05:21:48 AM IST

Last Updated : 13 May 2010 10:30:32 AM IST

கிருஷ்ணகிரி, மே 12: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மாம்பழ பூச்சிகளைக் கட்டுப்படுத்த இலவச செயல் விளக்கம் நடத்தப்படும்.

இதற்காக ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர் பெ.பிரபாகர் கூறினார்.

டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் சார்பில் ஆத்மா திட்டம் ஆகியன இணைந்து மாம்பழ பூச்சி அழிக்கும் செயல் விளக்கத் துவக்க விழா மூங்கில்புதூர் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை மாவட்ட வருவாய் அலுவலர் பெ.பிரபாகர் தொடங்கிவைத்துப் பேசியது:

தத்துப்பூச்சி, பழ ஈ, மாவுப் பூச்சி, தண்டு துளைப்பான் பூச்சிகளால் மா பாதிக்கப்பட்டாலும், பழ ஈ முதிர் தருவாயில் உள்ள காய்களைத் தாக்கி ஊற்பத்தியை 30 சதவீதம் குறைத்து இழப்பை ஏற்படுத்தும்.

பழ ஈ பூச்சியின் தாக்குதல் ஏப்ரல், மே, ஜுன் மாதங்களில் அதிகமாகக் காணப்படும். பழ ஈ பூச்சியைக் கட்டுப்படுத்துவது குறித்து இலவச செயல்விளக்கம் அளிக்க ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 6 இனக்கவர்ச்சி பொறி வைக்கப்பட்டு, மா பழ ஈ பூச்சி அழிக்கப்படுகிறது. அனைத்து வட்டாரங்களிலும் இந்த செயல்விளக்கம் செய்துக் காட்டப்படும் என்றார். டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தர்ராஜ், வேளாண்மை இணை இயக்குநர் கே.ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகள் ஆய்வு**

First Published : 13 May 2010 12:22:53 AM IST

Last Updated : 13 May 2010 09:53:42 AM IST

கும்பகோணம்,மே 12: காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளை பொதுப்பணித் துறையின் தஞ்சை கீழ்காவிரி வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர் சதாசிவம் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிக்காக ரூ. 5.95 கோடியை முதல்வர் அறிவித்ததின் அடிப்படையில் தஞ்சை, நாகை,திருவாரூர் மாவட்டங்களில் உள்ள ஆறுகள், வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, கும்பகோணம் வட்டத்தில் சேஷம்பாடி கிராமத்தில் ரூ. 2 லட்சத்தில் முடிகொணடான் ஆற்றில் 600 மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10 ஆண்டுகளாக இப்பகுதி தூர்வாரப்படாததால், பாசனத்திற்காக 756 கன அடி தண்ணீர் வழங்கும்போது ஆற்றின்கரைகள் பலவீனமாக இருந்ததால் விளைநிலங்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தி வந்தன.

நிகழாண்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டவுடன், முதல்கட்டமாக முடிகொண்டான் ஆற்றில் சேஷம்பாடி கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும்வண்ணம் தூர்வாரி கரைகள் பலப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், கண்காணிப்புப் பொறியாளர் சதாசிவம் சேஷம்பாடி முடிகொண்டான் ஆற்றில் புதன்கிழமை ஆய்வு நடத்தினார்.

ஆய்வின்போது காவிரி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் எஸ். அசோகன், வெண்ணாறு வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் கே. நேரு, உதவி செயற்பொறியாளர் எஸ். ராமமூர்த்தி, உதவிப் பொறியாளர்கள் எஸ். கண்ணன், எஸ். மாரிமுத்து உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**பொள்ளாச்சி சந்தைக்கு காய்கறி வரத்து குறைவு: விலை அதிகரிப்பு**

பொள்ளாச்சி : வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளதால், பொள்ளாச்சி சந்தைக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு, முக்கோணம், பூலாங்கிணறு, கோமங்கலம், அம்பராம்பாளையம், புரவிபாளையம் உள்ளிட்ட கிராமங்களிலிருந்து நாட்டுரக காய்கறி வரத்துள்ளது. ஊட்டி, நீலகிரி பகுதியிலிருந்து இங்கிலீஷ் காய்கறி வரத்துள்ளது. இரண்டு மாதங்களாக வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளதால், சந்தைக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளது. கடந்த

மாதம் பத்து டன் காய்கறி வரத்து இருந்த நிலையில், தற்போது ஆறு டன் மட்டுமே வரத்துள்ளது. இதனால், காய்கறிகளின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இங்கிலீஷ் ரக காய்கறிகளின் விலை ஒரு மாதத்தில் கிலோவுக்கு 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.நாட்டு தக்காளி விலை ஒரு மாதத்தில், கிலோவுக்கு 12 ரூபாய் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ தக்காளி எட்டு ரூபாய்க்கு விற்றது. பீன்ஸ் 20 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர்ந்துள்ளது.

வியாபாரிகள் கூறுகையில்,' கோடை மழை கை கொடுக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், எதிர்பார்த்த மழை பொழிவு இல்லாததால், காய்கறி பயிருக்கு தண்ணீர் கிடைக்காமல் வாடியதால், வரத்து குறைந்து விலை உயர்ந்துள்ளது. விலை உயர்வால், மக்களின் வாங்கும் சக்தி குறைந்து; 40 சதவீதம் விற்பனை சரிந்துள்ளது'. என்றனர்.

**கொளுத்தும் வெயிலால் வாடிய தக்காளி செடிகள்**

சாணார்பட்டி : சாணார்பட்டியில் கடந்த ஒன்றரை மாதங் களாக மதிய நேரத்தில் விவசாயத்திற்கு மின் சப்ளை செய்வதால் தக்காளி உள்ளிட்ட செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பண்ணப்பட்டி விவசாயி சேகர் கூறியதாவது: கோபால்பட்டி அருகேயுள்ள வி.குரும்பப்பட்டி துணை மின் நிலையத்திற் குட்பட்ட சாணார்பட்டி கிராமப்பகுதிகளான சாணார்பட்டி, பண்ணப் பட்டி, மஞ்சநாயக்கன் பட்டி, ராகலாபுரம்,ஆவிளிப்பட்டி, வீரசின்னம் பட்டி, எமக்காலபுரம், பரதே சிப்பட்டி,மருநூத்து, கொசவப்பட்டி, கோணப்பட்டி ஆகிய பகுதிகளில் கடந்த ஒன்றரை மாதங்களாக மதியம் மின் சப்ளை அமலில் உள்ளது.

தற்போது கொளுத்தும் வெயிலால் மதிய நேரத் தில் தண்ணீர் பாய்ச்சினால் தக்காளி,வெள்ளரி செடிகள் வாடி விடுகின்றன. மின்வாரியம் இப்பகுதிகளுக்கு தற்போதுள்ள மின் சப்ளை நடைமுறையை மாற்றி,காலையில் மின் சப்ளை வழங்க வேண்டும்.

**பாதி விலையில் பயிர் பாதுகாப்பு கருவிகள்**

வடமதுரை : விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்யும் பயிர்களை பூச்சி மற்றும் நோய்களில் இருந்து காக்க வாடகைக்கு பயிர் பாதுகாப்பு கருவிகளை ஏற்பாடு செய்கின்றனர். இதில் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்படுவதுடன் முறையாக அடிக்காததால் நோக்கம் முழுமையாக நிறைவேறுவதில்லை. இதனை கருத்தில் கொண்டு பயிர் பாதுகாப்பு கருவிகளை ஐம்பது சதவிகித மானியத்தில் அரசு வழங்குகிறது. வடமதுரை விவசாய விரிவாக்க மையம் மூலம் வழங்கும் விசைத் தெளிப்பான், கைத்தெளிப் பான் மற்றும் மரப்பயிர்களுக்கு மருந்து அடிக்கும் ராக்கர் தெளிப்பான்களை பாதி விலையில் வாங்கி பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**பழநியில் சம்பா நெல் சாகுபடி**

பழநி : பழநியில் சம்பா பருவத்தில் 6 ஆயிரத்து 500 எக்டேரில் நெல் விவசாயம் செய்யப்படுகிறது.

இந்த ஆண்டிற்கான சாகுபடி பணிகள் துவங்கியுள் ளன. அறுவடை முடிந்த நிலத்தில் மண்மாதிரி ஆய்வு செய்ய வேண்டும். எலிகளை முற்றிலும் ஒழிக்க வேண்டும். தேவையான ஆலோசனைகளை அருகில் உள்ள வேளாண் மை அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என உதவி இயக்குனர்(பொறுப்பு) காளிமுத்து தெரிவித்துள்ளார்.

**சத்தி பகுதியில் விவசாய நிலங்களில் மயில்கள் நடமாட்டம் அதிகரிப்பு**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதி வயல் வெளிகளில் சாதாரணமாக மயில்கள் உலா வருகிறது. சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. இங்கு விவசாய நிலங்கள் அதிகமாக உள்ளது. இந்த நிலங்களில் நெல் வாழை கரும்பு மற்றும் மல்லிகை பூ உள்ளிட்ட பயிர்கள் விவசாயம் செய்து வருகின்றனர்.

விளைநிலங்களில் பயிர்செய்யும் பயிர்களை மயில்கள் சேதப்படுத்துவது வாடிக்கையாகிவிட்டது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் தண்ணீர் பாசனத்திற்காக விடப்பட்டு நெற்பயிர் நடவு செய்து சில இடங்களில் நடவு செய்யப்பட்ட நெற்பயிர் அறுவடையாகியுள்ளது. அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர் மற்றும் அறுவடை செய்யப்பட்ட வயல்களிலும் மயில்கள் கூட்டம் கூட்டமாக உலா வந்துகொண்டுள்ளது. மயில்கள் தேசிய பறவை என்பதால் விவசாயிகள் மயில்மீது தாக்குதல் நடத்த அச்சமடைகின்றனர். இதனால் நெற்பயிர்களை சேதப்படுத்தும் மயில்களை விரட்டியடித்தால் மீண்டும் அடுத்த வயலுக்கு சென்று விடுகிறது. மொத்தத்தில் சத்தியமங்கலம் பகுதியில் மயில்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**தேங்காய் பருப்பு வரத்து அதிகரிப்பு**

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய் பருப்பு வரத்து அதிகரித்தது. விற்பனை கூடத்துக்கு 965 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்திற்கு வந்தது. தேங்காய் பருப்பு ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 33 ரூபாய் குறைந்தபட்சமாக 25 ரூபாய் என ஏலம் போனது. ஏலத்துக்கு வந்த 965 மூட்டை தேங்காய் பருப்பு 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரம் 1080 மூட்டை ஏலத்துக்கு வந்தது. கடந்த வாரத்திற்கு முந்தைய வாரம் மூட்டைகள் விற்பனைக்கூடத்திற்கு வெளியே  ஏற்றி இறக்க கூலி உயர்வு காரணமாக ஏலம் நடைபெறவில்லை.

**தேங்காய் பருப்பு விலை 50 காசு உயர்வு**

கோபிசெட்டிபாளையம்: கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கடந்த ஆறு மாதங்களில் அதிகபட்சமாக 425 தேங்காய் பருப்பு மூடைகள் ஏலத்துக்கு வந்தது.

கோடைக்காலம் முடியும் நிலையில் உள்ளதால் தேங்காய் பருப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் புதன் கிழமை தேங்காய் பருப்பு ஏலம் நடந்து வருகிறது. கோடை வெயில் காரணமாக இளநீருக்கும் பருப்பு விலை உயர்வு காரணமாக தேங்காய்க்கும் நல்ல கிராக்கி இருந்தது. இதனால் விவசாயிகள் தேங்காய் பருப்பை உற்பத்தி செய்வதில் ஆர்வம் இல்லாமல் இருந்தனர். கடந்த ஐந்து மாதங்களில் குறைந்தளவே தேங்காய் பருப்பு மூட்டைகள் கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு விற்பனைக்கு வந்தது.

நடப்பு வாரம் 425 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. கடந்த வாரத்தை விட 84 மூட்டை அதிகம். அதிகபட்சமாக ஒரு கிலோ 33 ரூபாய் குறைந்தபட்சமாக 32 ரூபாய் சராசரியாக 33 ரூபாய் 46 பைசாவுக்கும் விற்றது. கடந்த வாரத்தை விட நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோ ஒன்றுக்கு 50 பைசா அதிகரித்திருந்தது. நடப்பு வாரம் ஏழு லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மூன்று வாரமாக எள் ஏலம் நடந்து வருகிறது. நடப்பு வாரம் எள் 74 மூட்டை விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோவுக்கு 47 ரூபாய்க்கும் குறைந்தபட்சமாக 41 ரூபாய்க்கும் விற்றது. எள்ளை கொள்முதல் செய்ய குறைந்தளவே வியாபாரிகள் வந்திருந்தனர். இதனால் எள் விற்பனை நடப்பு வாரம் 'டல்லாக' இருந்தது.

**வறட்சியால் தென்னை மரங்கள் பாதிப்பு :பர்கூர் பகுதி விவசாயிகள் கடும் கலக்கம்**

கிருஷ்ணகிரி: பர்கூர் மற்றும் மத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் வறட்சி காரணமாக தென்னை மரங்கள் காய்ந்து வருகிறது. இதனால், தென்னை விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரியை அடுத்த பர்கூர், ஒரப்பம், கந்திகுப்பம், பாலேப்பள்ளி, வரட்டனப்பள்ளி, சின்னமட்டராபள்ளி, குருவிநாயனப்பள்ளி, காரகுப்பம், பெலவர்த்தி மற்றும் மத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் 12 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் ஆற்றுபாசனம் மற்றும் கால்வாய் பாசனங்கள் இல்லாத நிலையில் நல்ல மழை பெய்து கிணறுகளில் தண்ணீர் தேங்கி நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தால் மட்டுமே நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும்.இந்த பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள் கடந்த காலங்களில் ஆந்திரா, கர்நாடகா, ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

சில ஆண்டுகளாக இந்த பகுதியில் தொடர்ந்து சீரான மழை பெய்யாத காரணத்தால் பாசன கிணறுகளில் தண்ணீர் வற்றியது மட்டுமன்றி நிலத்தடி நீரும் வெகுவாக குறைந்தது. மேலும் கடந்த ஒரு மாத காலமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வந்தாலும் பர்கூர் மற்றும் மத்தூர் பகுதியில் போதிய மழையில்லை.

தற்போது, அக்னி நட்சத்திர வெயில் காரணமாக கடுமையான வெப்பக்காற்று வீசி வருகிறது. இதன் காரணமாக பசுமையாக இருந்த தென்னை மரங்கள் தற்போது காய்ந்து வருகிறது.தண்ணீர் இல்லாமல் மரத்தில் தென்னம்பாளைகள் விடுவது முற்றிலும் தடைப்பட்டுள்ளது. மேலும், மரங்கள் குருத்து வரையில் காய்ந்து மரம் பட்டுபோயுள்ளது. இதனால், தென்னை விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

பர்கூரை அடுத்த பாலிநாயனப்பள்ளி தென்னை விவசாயி சேகர் கூறியது:கடந்த சில ஆண்டுகளாகவே பர்கூர் பகுதியில் போதிய அளவு மழை பெய்யவில்லை. மேட்டுப்பாங்கான நிலங்களில் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்து வந்த நிலை மாறி தற்போது நெல் சாகுபடி செய்வது கேள்விக்குறியாகியுள்ளது.

நெல் மற்றும் மற்ற பயிர்கள் சாகுபடி செய்ய முடியாத நிலையில் நிலத்தில் தென்னை மரங்களை நட்டு வைத்தோம். நிலத்தடி நீர் மட்டம் நன்றாக இருந்த காலத்தில் அதிக தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர்.சில ஆண்டுகளாகவே மழை ஏமாற்றி வருகிறது. மழை இல்லாமல் ஏற்பட்ட கடும் வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்து போனதால் பல ஏக்கரில் இருந்த மரங்கள் வெட்டப்பட்டது.

மீதம் உள்ள மரங்களில் குறைவான விளைச்சல் மட்டுமே பெறப்பட்டது. இந்த ஆண்டும் எதிர்பார்த்த மழை இல்லாததாலும், கடும் வெப்ப காற்று வீசி வருவதாலும் தென்னை மரங்கள் கருகி வருகிறது.பெயரளவுக்கு மட்டுமே ஏக்கர் கணக்கில் தென்னை மரங்கள் உள்ளன. இதனால் பர்கூர் பகுதியில் செயல்பட்டு வந்த பல தேங்காய் மண்டிகள் மூடப்பட்டுள்ளது. தொழிலை விட முடியாத சிலர் மட்டும் மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியில் உற்பத்தியாகும் தேங்காய்களை வாங்கி வந்து உரித்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

இந்த நிலை தொடர்ந்தால் வரும் காலங்களில் பர்கூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள தென்னை மரங்களை வெட்டி விட்டு மாற்று விவசாயத்துக்கு செல்ல வேண்டிய நிலைக்கு தென்னை விவசாயிகள் தள்ளப்படுவார்கள். பாதிக்கப்பட்டுள்ள தென்னை விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**'தென்னையில் காய்ப்பு திறன் அதிகரிக்க உரம் அவசியம்'**

நாமக்கல்: 'தென்னையில் அதிக காய்கள் பிடிக்க தேவையான உரம் அளிக்க வேண்டும்' என நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:  தென்னையில்அதிக காய்கள் பிடிக்க தேவையான உரம் அளிக்க வேண்டும். அப்போதுதான் எதிர்பாத்த காய்கள் பெற முடியும். மழை காலங்களான ஜூன் ஜூலை மற்றும் டிசம்பர் ஜனவரி மரங்களில் தென்னைக்கு உரமிடுவது சிறந்தது. ஒரு தென்னை மரத்துக்கு 1.3 கிலோ யூரியா 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் 3.5 கிலோ பொட்டாஸ் இட வேண்டும். ஒரு கிலோ தென்னை நுண்ணூட்டம் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு மற்றும் 50 கிலோ மக்கிய தொழு உரம் ஆகியவற்றை நன்கு கலந்து கொள்ள வேண்டும். தென்னை மரத்தை சுற்றி ஐந்தடி தூரத்தில் ஒரு அடி அகலம் அரை அடி ஆழத்துக்கு வட்டப்பாத்தி அமைத்து அதில் கலந்து வைத்துள்ள உரக்கலவையை கொட்டி மூடி தண்ணீர் விட வேண்டும்.

இவை தவிர 160 மி.லி. தண்ணீருடன் தென்னை டானிக் 40 மி.லி. கலந்து ஆறு மாதத்துக்கு ஒரு முறை வேர் மூலம் செலுத்தினால் குரும்பை பிடிப்பு அதிகரிக்கும். தென்னை நுண்ணூட்டம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் தென்னை டானிக் சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்திலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அவற்றை பயன்படுத்தி உயர் விளைச்சல் பெற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி இலக்கு வேளாண் இணைஇயக்குனர் தகவல்**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு ள்ளதாக வேளாண் இணை இயக்குனர் லோகநாதன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:மேட்டூர் அணை வரும் ஜூன் 12ம்தேதி திறக்கப்படும் பட்சத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சையில் 11 ஆயிரத்து 250 ஏக்கரிலும், பூதலூரில் 6 ஆயிரம் ஏக்கரிலும், திருவையாறில் 15 ஆயிரம் ஏக்கரிலும் என மொத்தமாக 1 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப் படவுள்ளது. மேலும் 1 லட்சம் ஏக்கரில் செம்மை நெல் முறை மூலம் சாகுபடி செய்யப்பட உள்ளது.இதற்காக ஆடுதுறை 43, 36, 45 ஆகிய ரகங்கள் ஏற்றவை. இந்த விதை ரகங்கள் அனைத்து விவசாய டெப்போக்களிலும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் யூரியா 2 ஆயிரம் மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி ஆயிரத்து 648 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் ஆயிரத்து 560 மெட்ரிக் டன்னும் இருப்பு உள்ளது.அதே போல் தனியார் கடைகளிலும் போதுமான அளவு உரம் இருப்பு உள்ளது. இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெற்றிலையில் வாடல் நோய் கட்டுப்படுத்த வழிமுறைகள்**

தேவதானப்பட்டி : பெரியகுளம் ஒன்றியத்தில் பயிடப்பட்டுள்ள வெற்றிலையில் காணப்படும் வாடல் நோயை கட்டப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை கூறியுள்ளது.

பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, மேல்மங்கலம், கீழவடகரை, தெய்வேந்திரபுரம், தாமரைக்குளம் ஆகிய கிராமங்களில் வெற்றிலை பயிடப்பட்டுள்ளது. வெற்றிலை வயல்களில் வேர்அழுகல், வாடல், இலை அழுகல், விதைப்புக் கொடி அழுகல், தீய்ச்சல், மேல்சாம்பல் நோய்கள் மற்றும் பூசம, பாக்டீரியா நோய்கள் அதிகமாக காணப்படுகின்றன. இந்நோய்களினால் அதிகமா பாதிப்பு ஏற்படுகிறது. வாடல் நோயை தாங்கக் கூடிய சிறுகமணி ஒன்று என்ற ரகத்தை பயிரிட வேண்டும். நோய் தாக்காத வயல்களில் விதைக் கொடிகளை தேர்வு செய்து நடவு செய்ய வேண்டும்.

விதைக் கொடிகளை நடவு செய்வதற்கு முன்பாக 0.25 சத போர்டோ மருந்து கலவையில் 5 நிமிடம் ஊற வைத்து நடவு செய்ய வேண்டும். டிரைக்கோடெர்மா விரிடி எனும் கதிர் பூசனத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் பத்து வேப்பம் புண்ணாக்குடன் கலக்க வேண்டும். சமச்சீர் உரமிட வேண்டும். நோய் தாக்கிய வயல்களில் இருந்து நீரை மற்ற வயல்களுக்கு பாய்ச்சக் கூடாது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெற்றிலை சாகுபடி நிலத்தை மாற்ற வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை நடவடிக்கைகள் மூலம் வெற்றிலையில் வாடல் நோயை கட்டுப்படுத்தலாம் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முத்தையா கூறியுள்ளார்.

**கோடை பருவ விதைகள், பூச்சிக் கொல்லிகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விற்பனை**

திருக்கோவிலூர்:கோடை பருவத்திற்கு ஏற்ற விதைகள் வேளாண் துறை மூலம் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.இது குறித்து திருக்கோவிலூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம் கூறியதாவது: வேளாண் துறை சார்பில் திருக்கோவிலூர், முகையூர் வட்டாரங்களில் கோடை பருவத்தில் பயிர் செய்யக் கூடிய விதை பொருட்கள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. விதைக் கிராமத் திட்டத்தின்கீழ் 50 சதவீத மானியத்தில் கம்பு, உளுந்து, ராகி, மணிலா விதைகளும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ஜிப்சம், ஜிங்க் சல்பேட் விற்பனை செய்யப்படுகிறது.

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத் திட்டத்தின் கீழ் உளுந்து, ஜிப்சம், வேம்பு கலந்த பூச்சிக் கொல்லி மற்றும் கைத்தெளிப்பான் மானிய விலையில் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கைத்தெளிப்பான் மற் றும் விசைத் தெளிப்பான்களும், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில் நெல் விதைகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம் தெரிவித்தார்.

**பருத்தி வரத்து தொடர்ந்து குறைவு**

அவிநாசி : அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு, கடந்த சில வாரங்களாக பருத்தி வரத்து றைந்து வருகிறது. தற்போது சீசன் முடிந்துள்ளதால், வரத்து குறைந்து வருவதாக, சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.இந்த வார ஏலத்துக்கு 250 மூட்டை பருத்தி வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 150 மூட்டை குறைவு. இந்த வார ஏலத்தில் அனைத்து ரகங்களின் விலை (குவிண்டாலுக்கு) பின்வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,000 முதல் ரூ.3,800 வரை, ஆர்.சி.எச்., ரூ.3,200 முதல் ரூ.3,300 வரை, டி.சி.எச்., ரூ.4,100 முதல் ரூ.4,700 வரை.

ஏலம் குறித்து கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: தற்போது பருத்தி சீசன் ஏறக்குறைய முடிந்துள்ளதால், வரத்து குறைந்து வருகிறது. அடுத்தகட்ட பருத்தி வரத்து வரும் ஜூலை மாத இறுதியில் துவங்கும். வரத்து குறைந்துள்ள நிலையிலும், டி.சி.எச்., ரகம் நல்ல விலைக்கு ஏலம் போனது. இந்த வார ஏலத்தில் ரூ.3 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. 55 விவசாயிகள், 16 வியாபாரிகள் பயனடைந்தனர், என்றார்.

**பருத்தி தட்டுப்பாடு; நூல் விலை ஏறும் அபாயம்**

திருப்பூர் : பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதித்தும் விடை பெறாமல் விலை மீண்டும்... மீண்டும்... உயர்வதால் உள்நாட்டு தேவைக்கு தட்டுப்பாடு தொடர்கிறது. பருத்தி விலையில் கேண்டிக்கு (356கிலோ) 1,000 ரூபாய் வரை குறைந்திருந்த நிலையில், மீண்டும் 500 ரூபாய் <உயர்ந்திருப்பது, நூற்பாலை உரிமையாளர்கள் உற்சாகம் இழந்துள்ளனர்.

இந்தியாவின் மொத்த பருத்தி விளைச்சல், 292 லட்சம் பேல்களாக கடந்த சீசனில் இருந்தது. ஏழு லட்சம் பேல் இறக்குமதி செய்தது. பழைய கையிருப்பு 71 லட்சம் பேல் என, 370 லட்சம் பேல் பருத்திகள் கிடைத்தன. உள்நாட்டு தேவைக்கு 240 லட்சம் பேல்; ஏற்றுமதிக்காக 80 லட்சம் பேல் என, 320 லட்சம் பேல் பருத்திக்கு செலவு கணக்கிடப்பட்டிருந்தது. 50 லட்சம் பேல் பருத்தி கையிருப்பு இருக்கும் என கணிக்கப்பட்டது.

இந்திய பருத்திக் கழகம் நூற்பாலைகளுக்கு போதுமான அளவு பஞ்சை ஒதுக்காமல், ஏற்றுமதியை ஊக்குவிப்பதாக நூற்பாலைகள் குற்றம்சாட்டிய போது, அடுத்த சீசனின் போது, 50 லட்சம் பேல் பருத்தி கையிருப்பு இருக்கும் என, அரசு சமாதானம் செய்தது. பதிவு செய்யப்பட்ட பருத்திகள் ஏற்றுமதியாகிவிட்ட பிறகு, எஞ்சியுள்ள பருத்தியும் மார்க்கெட்டுக்கு  வரவில்லை.

மத்திய அரசு ஏப்., 20ம் தேதி பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதித்தது. ஒருவாரத்திற்கு பிறகு, பருத்தி விலையில், கேண்டிக்கு 1,000 ரூபாய் வரை விலை குறைந்தது. அதிகபட்சமாக 31 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்கப்பட்ட பருத்தி, 30 ஆயிரமாக குறைந்தது. அளவுக்கு அதிகமாகவே பருத்தியை ஏற்றுமதி செய்த பிறகு, தடைவிதிக்கப்பட்டதால், பருத்தியின் கையிருப்பு குறைந்திருந்தது. எனவே, தடைவிதித்தும், எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

இம்மாத துவக்கத்தில் விலை குறைந்திருந்தும், தற்போது கேண்டிக்கு 500 ரூபாய்க்கும் அதிகமாக விலை கூடியுள்ளது. ஒசைரி நூல் கடந்த வாரம் கிலோவுக்கு ஐந்து ரூபாய் குறைக்கப்பட்டது. 30ம் நம்பர் நூல் கிலோவுக்கு இரண்டு ரூபாய் குறைக்கப்பட்டது.

தற்போது, பருத்தி விலை உயர்ந்துள்ளதால், பெரும்பாலான மில்கள், இரண்டு ரூபாய் விலை குறைப்பிற்கு பதிலாக, 30ம் நம்பர் நூல் விலையை உயர்த்தியுள்ளதாக உற்பத்தியாளர்கள் வருத்தமடைகின்றனர். ஸ்பின்னிங் மில்ஸ் அசோசியேஷன் தலைவர் அப்புக்குட்டி கூறியதாவது:ஏற்றுமதிக்கு தடைவிதிக்கப்பட்ட பிறகு, பருத்தி விலை சற்று குறைந்து வந்தது. உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை மீண்டும் 500 ரூபாய்க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. ஆனால், ஒப்புக்கொண்டபடி, பெரும்பாலான நூல் விலை ஐந்து ரூபாய் அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் பற்றாக்குறை, தொடர்மின்வெட்டால் ஏற்கனவே நூற்பாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மீண்டும் பருத்தி விலை உயர்வது புரியாத புதிராக உள்ளது. நூற்பாலைகளின் பிரச்னைகளை கேட்க யாருமே இல்லை. நவம்பர் மாத இறுதியில்தான், நூல் விலை மாற்றங்கள் குறித்து யூகிக்க முடியும். தற்போது பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பஞ்சு விலை உயர்ந்து நூற்பாலைகளின் பாதிப்பை அதிகரிக்கும். இவ்வாறு, அப்புக்குட்டி கூறினார்.

**ஊட்டியில் இன்று மலர் கண்காட்சி தாவரவியல் பூங்கா வண்ணமயம்**

மே 14,2010,00:00  IST

---



ஊட்டி:ஊட்டி தாவரவியல் பூங்காவில் இன்று மலர் கண்காட்சி துவங்குகிறது. மலர்களால் வேயப்பட்ட புதிய தலை மைச் செயலகம், திருவள்ளுவர் சிலை, மெகா அன்னப்பறவை போன்றவை, இந்தாண்டின் சிறப்பு அம்சங்கள்.கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான மலர் கண்காட்சி, ஊட்டி தாவரவியல் பூங்காவில் இன்று துவங்கி 16ம் தேதி வரை நடக்கிறது.

114வது ஆண்டாக நடக்கும் இந்த மலர் கண்காட்சியில், சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு 15 ஆயிரம் மலர்த்தொட்டிகள் வைக்கப்படவுள்ளன. இதற்காக பிளாக்ஸ், கசான்யா, பாப்பி, பேன்சி, ஆஸ்டர், குட்டை சூரியகாந்தி, மேரி கோல்டு, சால்வியா, பெடுன்யா, டேலியா, டெல்பினியம், ஆர்டினேரியா ஆகிய மலர்கள் நடவு செய்யப் பட்டுள் ளன.மலர் தொட்டிகளுக்கு வர்ணம் பூசி, பூங்காவில் உள்ள ஸ்டாண்டுகளில் வரிசையாக அலங்கரித்து வைக்கப்படும்.

இந்த மலர் தொட்டிகளுடன் 'ஈகுபேனா' எனப்படும் கொய் மலர்கள் அலங்காரமும் மலர் கண்காட்சி நாட்களில் இடம் பெறவுள்ளது.இந்தாண்டு சிறப்பம்சமாக சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் தலைமைச் செயலகம் மற்றும் செம்மொழி மாநாட்டை குறிக்கும் வகையில் திருவள்ளூர் சிலை வடிவங்களில் மலர் அலங்காரம் செய்யப்பட வுள்ளன. இதற்கென இரண்டு லட்சம் மலர்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

மலர் கண்காட்சிக்காக 200 ரகங்களுக்கு மேற்பட்ட இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன.இந்தாண்டு நுழைவு கட்டண வசூலை தோட்டக்கலைத் துறையே ஏற்றுள்ளது. பெரியவர்களுக்கு 20 ரூபாயும், சிறுவர்களுக்கு 10 ரூபாயும் கட்டணம் நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதாலும் கூட்ட நெரிசலை தவிர்க்க, பூங்கா சாலையில் தற்காலிக டிக்கெட் கவுன்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன.கண்ணாடி மாளிகைக்குள் கேமரா மொபைல் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. கண்ணாடி மாளிகைக்குள் படம் எடுத்தால், அபராதம் வசூலிக்கப்படும் என பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது

**இறங்கு முகத்தில் குண்டு மிளகாய்**

மே 14,2010,00:00 IST




ராமநாதபுரம்:தென்மாவட்டங்களில் குண்டு மிளகாய் விலை கணிசமாக குறைந்துள்ளது. கர்நாடக மாநிலத்திற்கு அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மிளகாய் வத்தலில், குண்டு மிளகாயை பொறுத்தவரை தூத்துக்குடி, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. சுவை மிகுந்த இந்த ரகத்துக்கு எப்போதும் கிராக்கி உண்டு. இருந்தும், தென்மாவட்டங்களில் பொய்த்து வரும் விவசாயத்தின் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் குறைந்த அளவே மிளகாய் விளைச்சல் இருந்து வருகிறது.

இதனால், பிரபல மசாலா நிறுவனங்கள் ஆந்திர மிளகாய்களையே தொடர்ந்து கொள் முதல் செய்து வருகின்றன. இம்முறை தென்மாவட்ட குண்டு மிளகாய் விளைச்சல் அமோகமாக உள்ளது. தேவைக்கு அதிகமாக வரத்து இருப்பதால், முன்பு கிலோ 60 முதல் 100 ரூபாயாக இருந்த அதன் விலை, தற்போது 40முதல் 80 ஆக குறைந்துள்ளது. இருப்பு அதிகமிருப்பதால், வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக புதுச்சேரி, கர்நாடகாவுக்கு அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு செல்லப் படுகிறது. சம்பா மிளகாய் கிலோ 35முதல் 50 ரூபாய்க்கு விலை போகும் நிலையிலும், குண்டு மிளகாய்க்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது குறிப்பிடதக்கது. பரமக்குடி மொத்த வியாபாரி சாதிக் அலி கூறியதாவது:

கடந்த ஆண்டை விட இம்முறை அதிகமான குண்டு மிளகாய் வரத்து உள்ளது. வாரம் தோறும் ராமநாதபுரத்தில் 13 ஆயிரம் மூட்டைகள், பரமக்குடியில் 15 ஆயிரம் மூட்டைகள், ஆர்.எஸ்.மங்கலத்தில் ஐந்தாயிரம் மூட்டை மிளகாய் வரத்து உள்ளது. மதுரை, சென்னை, திருச்சி, வேலூரை தொடர்ந்து, கர்நாடகா, புதுச்சேரிக்கும் அதிக அளவில் விற்பனை செய்து வருகிறோம்.இவ்வாறு சாதிக் அலி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**சென்ற 2009–10–ஆம் ஆண்டு வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 21.82 கோடி டன்னாக இருக்கும்**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*இந்தியாவில், அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்தி 2009–10–ஆம் வேளாண் பருவத்தில் (ரபி மற்றும் கரீஃப் ஆகிய பருவங்கள் உள்பட) 21.82 கோடி டன்னாக இருக்கும் என மத்திய வேளாண் துறையின் மூன்றாவது மதிப்பீட்டின் வாயிலாக தெரிய வந்துள்ளது.*
*முந்தைய 2008–09 வேளாண் பருவத்தில் இது 23.45 கோடி டன்னாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது, உணவு தானியங்கள் உற்பத்தி 7 சதவீதம் குறைந்துள்ளது. இதற்கு, சென்ற கரீஃப் பருவத்தில் (ஜூன் – செப்டம்பர்) நிலவிய கடும் வறட்சியே காரணமாகும். அதேசமயம், எதிர் வரும் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*கோதுமை*
*2009–10 வேளாண் பருவத்தில், கோதுமை உற்பத்தி 8.07 கோடி டன்னிலிருந்து 8.10 கோடி டன்னாக அதிகரித்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*
*இதே பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 1.4 சதவீதம் அதிகரித்து 1.46 கோடி டன்னிலிருந்து 1.48 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கோதுமை, பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரிக்கும் நிலையிலும், இதர உணவு தானியங்கள் உற்பத்தியில் ஏற்படும் சரிவால், ஒட்டுமொத்தத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி குறைந்துள்ளது.*
*சென்ற ரபி பருவத்தில் (அக்டோபர் – மார்ச்) நெல் உற்பத்தி 1.43 கோடி டன்னிலிருந்து 1.45 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இருப்பினும், கரீஃப் பருவத்தில் ஏற்பட்ட உற்பத்தி குறைவால், நடப்பு பருவத்தில் ஒட்டுமொத்தத்தில் நெல் உற்பத்தி 10 சதவீதம் சரிவடைந்து 9.92 கோடி டன்னிலிருந்து 8.93 கோடி டன்னாக சரிவடையும் என வேளாண் துறை எதிர்பார்க்கிறது.*
*இதே காலத்தில், சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற இதர தானியங்கள் உற்பத்தி 17 சதவீதம் சரிவடைந்து 4 கோடி டன்னிலிருந்து 3.31 கோடி டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியும் 8 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, இவற்றின் உற்பத்தி 2.77 கோடி டன்னிலிருந்து 2.54 கோடி டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*பருத்தி*
*இதே காலத்தில், பருத்தி உற்பத்தி 2.77 கோடி பொதிகளிலிருந்து (ஒரு பொதி = 170 கிலோ) 2.54 கோடி பொதிகளாக குறையும் என வேளாண் துறையின் மூன்றாவது மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், அரசு அதிகாரிகள், விவசாயிகள், தொழில் மற்றும் வர்த்தக துறை பிரதிநிதிகள் அடங்கிய பருத்தி ஆலோசனை வாரியம், நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி வியக்கத்தக்க வகையில் 3 கோடி பொதிகளாக உயரும் என எதிர்பார்க்கிறது.*
*மேலும், கரும்பு உற்பத்தியும் 28.50 கோடி டன்னிலிருந்து 27.47 கோடி டன்னாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.*
*அதேசமயம், நடப்பு பருவத்தில், உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி நன்றாக இருக்கும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, சென்ற ஒரு மாதத்தில் சர்க்கரை விலை 30 சதவீதம் குறைந்துள்ளது. சர்க்கரை பயன்பாட்டில் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நம் நாட்டில், ஆண்டுக்கு 2.30 கோடி டன் சர்க்கரை பயன்படுத்தப்படுகிறது.*
*பருவமழை*
*வரும் கரீஃப் பருவத்தில் (ஜூன் – செப்டம்பர்) பருவமழை போதிய அளவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தனியார் வானிலை ஆய்வு மையங்களும் தென்மேற்கு பருவமழை நல்ல அளவில் இருக்கும் என முன்னறிவிப்பு செய்துள்ளன.*
*நம் நாட்டில், விவசாயிகள் பருவமழையையே பெரும்பாலும் நம்பி உள்ளதால், இது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். வரும் பருவத்தில், வேளாண் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்படும். நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் விவசாயம் சார்ந்த தொழில்களையே நம்பி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.44%–ஆக உயர்வு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் தொடர்ந்து இரண்டு வாரங்களாக குறைந்து வந்தது. இந்நிலையில் பழங்கள் மற்றும் காய்கறிகள் விலை உயர்ந்ததையடுத்து, மே 1–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது 0.40 சதவீதம் உயர்ந்து 16.44 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய வாரத்தில் 16.04 சதவீதமாக இருந்தது.
பழங்கள், காய்கறிகள்
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள் மற்றும் காய்கறிகள் விலை முந்தைய வாரத்தைக் காட்டிலும் தலா 2 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு மற்றும் தேயிலை விலை முறையே 5.95 சதவீதம் மற்றும் 5 சதவீதம் உயர்ந்துள்ளது. உளுந்து, துவரம் பருப்பு, ஊறுகாய், நறுமண பொருள்கள் விலை தலா 1 சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற ஓர் ஆண்டில், பருப்பு வகைகள் மற்றும் பழங்கள் விலை முறையே 32.49 சதவீதம் மற்றும் 15.51 சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் ஏற்பட்ட வறட்சியால், உணவு பொருள்கள் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, சென்ற மார்ச் மாதத்தில், மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம், கடந்த 17 மாதங்களில் இல்லாத அளவிற்கு 9.9 சதவீதமாக உயர்ந்தது.
தேவைப்பாடு
உற்பத்தியைக் காட்டிலும் தேவைப்பாடு அதிகரித்து வருவதால் பொருள்கள் விலை உயர்ந்து பணவீக்கம் அதிகரித்து வருகிறது. பணப்புழக்கம் அதிகமாக இருந்தாலும், தேவைப்பாடு அதிகரிக்கும். எனவே, பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி, சென்ற ஏப்ரல் 20–ந் தேதி அன்று வெளியிட்ட கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தியது.
மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்க விகிதம் ஏப்ரல் மாதத்தில் 9.5 சதவீதமாக சற்று குறையும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்த அதிகாரபூர்வமான அறிவிப்பை மத்திய அரசு இன்று வெளியிடுகிறது.